பழந்தமிழ் வினையடிகளின் பாகுபாடு

(Classification of Verbal bases in Old Tamil)

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்
அமிர்தா விஷ்வ வித்யபீடம்
கோயம்பத்தூர்
rajushush@gmail.com

இக்கட்டுரை "தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு (A Historical Linguistic Analysis of Tamil verbal Bases)" என்ற செம்மொழி நிறுவன நிதி நல்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத்திட்டத்திற்கு 2008-இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் (இராசேந்திரன், 2008) ஒரு இயலாக அமைகின்றது.

வினை என்பது பொதுவாக ஒரு வாக்கியத்தில் ஒரு செயலையோ நிலையையோ வெளிப்படுத்துவதற்காக பயனிலையில் வரும் முக்கியமான அங்கமாகும். இது காலம், வினைநோக்கு, வினையாற்றுவகை, வினைப்பாடு இவற்றிகாகத் திரிபுறும். வினைகள் மரபிலக்கணத்தராலும் தற்கால இலக்கணதாராலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. வினையடிகளின் பாகுபாட்டைப் பின்வரும் தலைப்பில் விளக்கலாம்:

1. தெரிநிலை வினை-குறிப்பு வினைப் பாகுபாடு
2. தன்வினை-பிறவினைப் பாகுபாடு
3. செயப்படுபொருள் குன்றாவினை-குன்றியவினைப் பாகுபாடு
4. வினைத்திரிபுசார் பாகுபாடு
5. சீரற்ற-சீரான வினைப் பாகுபாடு

1.தெரிநிலை வினை-குறிப்பு வினைப் பாகுபாடு

மரபிலக்கணங்களில் கூறப்பட்டுள்ள வினப்பாகுபாடுகளில் முக்கியப் பாகுபாடு வினை, குறிப்பு என்பதாகும். இது தொல்காப்பியரால் முதலில் கூறப்பட்டுள்ளது (தொல்.சொ.201) வினை

என்பது பிற்காலத்தில் தெரிநிலை வினை என்றும் குறிப்பு என்பது குறிப்பு வினை என்றும் அழைக்கப்பட்டன. இலக்கணக்கொத்து (17ஆம் நூற்றண்டு) இந்தச் சொற்களைப் பயன்படுத்துகின்றன. தெரிநிலை என்பது வினை வெளிப்படையாக காலப் பின்னொட்டையோ எதிர்மறை பின்னொட்டையோ கொண்டிருப்பதைக் குறிப்பிடும்.

குறிப்பு வினை என்பது காலமில்லாத பயனிலையைக் குறிப்பிடும். பாலசுப்பிரமணியன் (Balasubramanian, 1980:68) குறிப்பு வினை என்பது ஒரு தவறான பெயர் என்று கூறி குறிப்பு வினையைக் 'காலமில்லாப் பயனிலை' (tenseless predicate) என்று அழைக்கிறார். இந்த இடத்தில் நாம் லாக்கோஃப் (Lakoff, 1970:115) வினைகளை பின்வருமாறு பாகுபடுத்துவதைக் குறிப்பிட வேண்டியதாகின்றது.

$$\begin{bmatrix} +\text{வினை} \\ +\text{பெயரடைசார்} \end{bmatrix} \qquad \begin{bmatrix} +\text{வினை} \\ -\text{பெயரடைசார்} \end{bmatrix}$$

வினை அல்லது தெரிநிலை வினை என்பதால் வினையானது காலப் பின்னொட்டுக்களை ஏற்கும் என்றும் குறிப்பு வினை என்பதால் அத்தகைய வினைகள் காலப் பின்னொட்டுகளை ஏற்காது வரும் என்றும் நாம் குறிப்பிடுகிறோம். சுப்ரமணிய சாஸ்திரி (Subramanya Sastri (1947:167) குறிப்பிட்டபடி குறிப்புவினை என்பது மூவிடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை), பால், எண் விகுதிகளை நேரடியாக அதன் அடியைத் தொடர்ந்து ஏற்கும் ஆனால் தெரிநிலை வினை காலம் அல்லது எதிர்மறைப் பின்னொட்டிற்குப் பின்னர்தான் ஏற்கும்.

குறிப்பு வினைகள் என்பது ஒரு சீரான வகுப்பைச் சார்ந்தவை அல்ல; அவற்றை இரண்டு துணைவகுப்புகளாகப் பிரிக்கலாம். ஒரு வகுப்பு மூவிட விகுதிகளையோ பெயரெச்ச பின்னொட்டையோ ஏற்றுவரும். அவைகள் உண்மையில் பெயர்களாகும். எ.கா.

கண்ணேன் 'கண்ணையுடைய நான்'

கண்ண 'கண்ணின்'

மற்றொரு வகுப்பு மூவிட விகுதிகளையோ வினையெச்சப் பின்னொட்டையோ பெயரெச்ச பின்னொட்டையோ ஏற்றுவரும். அவறை பெயரடைசார் அடி எனலாம். எ.கா.

பெரியன், பெரிது, பெரிய, பெரும்

இந்த வேறுபாடு வினைகளின் தெரிவடைகளின் உருவாக்கம் பற்றி விளக்க பயனுள்ளதாய் அமையும்.

2. தன்வினை-பிறவினைப் பாகுபாடு

தெரிநிலை வினகள் என்று அழைக்கப்படுவைகளை இரண்டு வழைகளில் பகுக்கலாம். ஒன்று தன்வினை-பிறவினை பாகுபாடு. இந்த வேறுபாடு தமிழில் உருபனியல் அடிப்படையில் தேவையானதாகும். பின்வரும் எடுத்துகாட்டு இதைத் தெளிவு படுத்தும்.

1	2
அடங்கு	அடக்கு
ஓடு	ஓட்டு
திருந்து	திருத்து
மாறு	மாற்று

மேற்கண்ட அட்டவணையில் முதல் குழுமத்தில் அடங்குபவை தன் வினைகளாகும்; இரண்டாம் குழுமத்தில் அடங்குபவை பிற வினைகளாகும். இந்தச் சூழலில் தொல்காப்பியம் இந்த பாகுபாடு பற்றி குறிப்பிடவில்லை என்று கூற வேண்டி வரும். இளம்பூரணார், நச்சினார்க்கினியார் போன்ற உரையாசிரியர்கள் தொல்.76-2 என்ற சூத்திரத்தைப் பொருள்கோள் செய்கையில் இந்தப் பாகுபாட்டைத் தொல்காப்பியருக்குத் தருகின்றனர்.

பரமசிவம் (Paramasivam 1979: 20-21) பொருண்மையியல் அடிப்படையிலும் உருபனியல் அடிப்படையிலும் தன்வினை-பிறவினை பாகுபட்டை விளக்க முயல்கின்றார். அவர் தன்வினை என்பதை ‘எழுவாய் உட்படுத்தப்பட்ட செயல்’ (‘action undergone by the subject’) மற்றும்

பிறவினை என்பதை ‘எழுவாயால் விளைவிக்கப்பட்ட செயல்’ என்று விளக்குகிறார். அவர் தன்வினை, பிறவினை என்பனவற்றை விளக்க முறையே ‘affectivity’ (பதிப்பு), ‘effectivity’ (விளைவு) என்ற சொற்களைப் பயன்படுத்துகின்றார். வடிவவாதம் அடிப்படையில் ஒரு அடைப்பொலியுள்ள வினைகள் ‘எழுவாய் பாதிக்கப்பட்ட செயல்’ உணர்த்துவன ஆகும்; ஒலி இரட்டித்த அடைப்பொலி உள்ள வினைகள் ‘எழுவாயால் விளைவிக்கப்பட செயல்’ உணர்த்துவன ஆகும் (பார்க்க: Paramasivam1979: 20-23).

3. செயப்படுபொருள் குன்றாவினை-குன்றியவினைப் பாகுபாடு

செயப்படுபொருள் குன்றாவினை-குன்றியவினைப் பாகுபாடு மற்றொரு முக்கியமான பாகுபாடு ஆகும். செயப்படுபொருள் குன்றாவினை-குன்றியவினை வேறுபாடு தமிழில் இலக்கணக்கொத்தால் செய்யப்படது. செயப்படுபொருள் ஏற்கும் வினையை ‘செயப்படுபொருள் குன்றா வினை’ என்றும் செயப்படுபொருள் ஏற்காத வினையை ’செயப்படுபொருள் குன்றிய வினை’ என்ற தொடர்களைப் பயன்படுத்தி முறையே வேறுபடுத்துகின்றது. இது முக்கியமான தொடரியல் அடிப்படையிலான உலகளாவிய பாகுபாடாகும். இந்தத் தகவல் வினை அடிகளின் பட்டியலில் அடக்கப்பட்டுள்ளது.

4. வினைத்திரிபுசார் பாகுபாடு

காலப் பின்னொட்டுகளின் மாற்றுருகளின் அடிப்படையில் செய்யப்பட்ட வேறு வகையிலான பாகுபாடு வினைத்திரிபுசார் பாகுபாடு என்று குறிப்பிடப்படும். இந்த வகையிலான வகைப்பாடு வெளிநாட்டு இலக்கணவியலார்களால் முதன் முதலில் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ் அறிஞர்களும் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டுனர். இவை பற்றி விரிவாகப் இங்கு விளக்கப்படும்.

வினையடிகளைப் பாகுபாடு தமிழ் வினைகளின் திரிபுகளை எளிதில் புரிந்து கொள்வதற்கும் கற்பதற்கும் வேண்டி பயன்படுகிறது. வினைப் பாகுபாடு குறித்து அகஸ்தியலிங்கம் தமது

'மொழியியல்:சொல்லியல்: வினையியல்' விரிவாகப் பேசுகின்றார் (அகத்தியலிங்கம், 1982:64-105). இவர் தெரிநிலை-குறிப்புவினை, தன்வினை-பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை-குன்றாவினை, செய்வினை-செயப்பாட்டுவினை. குறைவினை, துணைவினை மற்றும் ஒட்டுவினை என்ற பாகுபாடுகளைச் செய்து அவற்றை விளக்குகின்றார். இது தவிர வினைப்பாகுபாடு என்ற பகுதியில் மெல்வினை-வல்வினை-இடையினை என்ற துணைத் தலைப்பின் கீழ் பெஸ்கி, கிரால், போப், ஆர்டன், தமிழ்பேரகராதி, லிஸ்கர், குமாரசாமி ராஜா, கோதண்டராமன், அகத்தியலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் வினைப்பாகுபாடுகள் குறித்து விரிவாக விளக்கி அவற்றின் நிறைகுறைகளைப் பற்றி பேசுகின்றார் (அகத்தியலிங்கம், 1982:78-105). இப்பாகுபாடுகள் தமிழ்வினையடிகள் குறித்த வரலாற்று மொழியியல் ஆய்வுக்கு இன்றியமையாதது என்பது மட்டுமன்றி இவ்வேறுபட்ட பாகுபாடுகள் வினையடிகள் குறித்த நமது சிந்தனையை வரலாற்றுமொழியியல் அடிப்படையில பல பரிமாணத்தில் சிந்தித்து ஆயத் துணைபுரியும். எனவே இப்பாகுபாடுகள் குறித்து இங்கு சுருக்கமாகத் தரப்பட்டள்ளது.

4.1 பெஸ்கியின் பாகுபாடு

பெஸ்கி தமது A Grammar of the Common Dialect of the Tamil Language என்ற நூலில் (Beschi, Repr.1971:70) இறந்தகாலம் பற்றி கூறுகையில் இது மிகக்கடினமான இலக்கணக்கூறு என்றும் எனவே விதிகள் அதிகமாகக் கூறப்படவேண்டியதாய் உள்ளது என்றும் குறிப்பிடுவார். இதன் காரணமாய் இவர் வினைகளை அவை ஏற்கும் இறந்தகால இடைநிலைகளின் அடிப்படையில் பகுத்துள்ளார். இவர் நிகழ்கால இடைநிலையை அடிப்படையாகக் கொண்டு அவற்றிலிருந்து இறந்தகால இடைநிலைகளளோடு கூடிய பால் காட்டும் விகுதிகளை உருவாக்குகின்றார். *கிறு, கின்று, -த்த்-* எனக்கூறாது காலம் காட்டும் இடைநிலைகளோடு விகுதிகளையும் இணைத்து *-க்கிறேன், -கின்றேன், -த்தேன்* எனக் குறிப்பிடுகிறார். இவர் நிகழ்கால இடைநிலைகளைப் பற்றி குறிப்பிடுகையில் மெல்வினை,

வல்வினை என்பனவற்றுடன் தொடர்புபடுத்தாது இவை உருவாக்குவதற்கு எளிமையானவை எனக் கூறிச்செல்கின்றார். இறந்தகாலம் பற்றி குறிப்படுகையில் இவர் வினைச்சொற்களை அவற்றின் ஈறுகள் அடிப்படையில் வேறுபடுத்தி அவற்றின் வருகையை நிகழ்கால வினைமுற்றுகளின் (*கிறேன், க்கிறேன்*) அடிப்படையில் விளக்குகிறார். பின்வரும் பட்டியல் இதை இவர் சிந்தனையை வெளிப்படுத்தும்:

1. *ய், ர், இ, உ, ஐ* ஆகிய எழுத்துகளில் முடிந்து *-க்கிறது* எடுக்கும் வினைகள் *-த்தேன்* ஏற்றுவரும்.

எ.கா.

மேய்கிறது மேய்த்தேன்

வளர்கிறது வளர்த்தேன்

விரிகிறது விரித்தேன்

படைக்கிறது படைத்தேன்

உடுக்கிறது உடுத்தேன்

2. அகரத்தில் முடியும் சில வினைகள் *-ந்தேன்* ஏற்றுவரும்.

எ.கா.

மறக்கிறது மறந்தேன்

பிறக்கிறது பிறந்தேன்

நக்கு, கக்கு போன்ற வினைகள் (இவை *ந, க* போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது எனத் தவறாகக் கருதி) இந்த விதிக்கு விலக்கானது அவை *-க்கிறேன்* ஏற்றுவரும்.

3. *-க்கிறது* எடுக்கும் *ஆ, நீ, தா* என்பன *க்கினேன்* ஏற்கும்.

எ.கா.

-க்கிறது க்கினேன்

ஆக்கிறது ஆக்கினேன்

நீக்கிறது நீக்கினேன்

தூக்கிறது தூக்கினேன்

(*ஆ, நீ, தூ* என்பனவற்றை வினைச்சொல்லின் பகுதியாகக் கருதுவதும் அவை –க்கிறது ஏற்றுவருவதும் பொருத்தமாக இல்லை.)

4. *-கிறது* என முடியும் விகைகள் பின்வருமாறு பல்வேறு பகுப்புகளாக வரும்.

ங்கு என்பதில் முடிவன *இன்* எடுக்கும்

ண் என்பதில் முடிவன *டேன்* எடுக்கும்

ன் கொண்டு முடிவன *றேன்* எடுக்கும்

உ கொண்டு முடிவன *இனேன்* எடுக்கும்

எ.கா. *வணங்கினேன், உண்டேன், தின்றேன், பேசினேன், நச்சினேன், எழுதினேன், திருத்தினேன், நம்பினேன், பண்ணினேன், உலாவினேன், தும்மினேன், பின்னினேன்.*

ஈனு இதற்கு விதிவிலக்காகும். இவ்வாறு இவர் பலவித பகுப்புகளைத் தந்து ஆங்காங்கே பல்வேறு விதிவிலக்குகளையும் தருவார். *-ந்தேன்* எடுக்கும் வினைகள் பலவற்றையும் இவ்வாறு விளக்கிச்செல்வார். எனினும் இவர் எல்லாவற்றையும் ஒரு சேர வைத்து அவற்றிடையே காணப்படும் பொதுத்தன்மையை விளக்கவில்லை (அகத்தியலிங்கம், 1982: 81).

இவர் வினைப் பகுப்பு ஒரு பகுப்பாக அமையாமல் ஒரு தொகுப்பாக உள்ளது. எனினும் முதன் முதல் இத்தகைய ஒரு பாகுபாட்டைப் பற்றி சிந்தித்தவர் இவர்தான் எனக்கூறவேண்டும். இவர் பகுப்புதான் பின்னர் வந்த இலக்கண அறிஞர்களை வினைகள் கால இடைநிலைகளின் அடிப்படையில் பாகுபடுத்தவேண்டும் என்றும் அவ்வாறு பாகுபடுத்தப்படுகையில் அவற்றின் ஈறுகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்றும் சிந்திக்க உதவியது என்று கூறலாம். மெல்லிவினை வல்வினை பாகுபாட்டிற்கு வழிவகுத்தவர் இவர்தான் என்று கூறவியலும் (அகத்தியலிங்கம், 1982:81).

4.2 கிராலின் பாகுபாடு

கிரால் தம்முடைய நூலில் (Graul, 1855) வினைகளை அவை ஏற்கும் கால இடைநிலைகள் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரித்தார். பெஸ்கியின் பகுப்பு *-கிறு, -க்கிறு* ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. நிகழ்காலத்தைப் பொறுத்தமட்டில் இவை இரண்டும் காணப்பட்டாலும் எதிர் காலத்தில் *-ப்ப்-, -ப்-, -வ்-* மூன்று இடைநிலைகள் வருவது உணரத்தக்கது. இந்நிலையில்தான் கிரால் இவற்றை அடிப்படையாக வைத்து மூன்றாகப் பிரித்தார்.

வினை வகுப்பு	**இறந்தகாலம்**	**நிகழ்காலம்**	**எதிர்காலம்**
1	செய்தான் விழுந்தான்	செய்கிறான் விழுகிறான்	செய்வான் விழுவான்
2	கண்டான் என்றான்	காண்கிறான் என்கிறான்	காண்பான் என்பான்
3	கொடுத்தான் நடந்தான்	கொடுக்கிறான் நடக்கிறான்	கொடுப்பான் நடப்பான்

மேலே காட்டப்பட்ட வினைகள் எதிர்காலத்தில் வரும்போது முறையே *–வ்-, -ப், -ப்ப்-* என்ற ஒட்டுக்களை எடுத்து வரும். முதல் பிரிவு மெல்வினைகள் (weak verbs) என்றும், இரண்டாவது பிரிவு இடைவினைகள் (middle verbs) என்றும், மூன்றாவது பிரிவு மெல்வினை (weak verbs) அழைக்கப்படும். வல்வினைவிகள் *-க்கிற்-* என்பதை நிகழ்கால ஒட்டாகவும் பிறவினைகள் *-கிற்-* என்பதை நிகழ்கால ஒட்டாகவும் ஏற்பது இங்கு நினைவு கூறத்தக்கது. இதுபோன்று வல்வினை செயவென் எச்சத்தில் *-க்க்-* பெற்று நிற்றலும் கவனிக்கத்தக்கது. செயவென் எச்சத்தை அடிப்படையாகக் கொண்டு வரும் இலக்கணக் கூறுகள் அனைத்தும் இந்நிலையிலேயே உள்ளன. எ.கா. *கொடுக்கலாம், கொடுக்கப்படலாம், கொடுக்க வேண்டும், கொடுக்க முடியும்.*

வல்வினைகளில் உயிர் கொண்டு வரும் இலக்கணக் கூறுகளும் (ஏவல் வினைகள் தவிர) *-க்க்-* பெற்று வருகின்றன. எ.கா. *கொடுக்காது, கொடுக்கும், கொடுக்கின், கொடுக்காமல்.*

இந்நிலையில் தான் கிரால் இத்தகைய வகைப் பாட்டினைச் செய்தார். மேனாட்டு மொழிகள் பலவற்றில் வல்வினை, மெல்வினை பாகுபாட்டைக் காணலாம். ஜெர்மன் போன்ற மொழிகளில் இப்பகுப்பு உள்ளது. இவற்றை அறிந்திருந்த காரணத்தால்தான் கிரால் தமிழ் மொழியிலும் இத்தகைய ஒரு பகுப்பைக் கண்டதோடு அவற்றிற்கு வல்வினை, மெல்வினை, இடைவினை என்று பெயரிட்டார் என எண்ணலாம். இம்மூன்று வகை வினைகளையும் அவை எடுக்கும் இறந்த கால மாற்றுபுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் ஏழு வகைகளாகப் அவர் பிரித்தார்.

			எதிர்கால வடிவம்	**நிகழ்கால வடிவம்**	**இறந்தகால வடிவம்**	**இறந்தகால ஒட்டுகள்**
1.மெல்வினை	1	அ	செய்வேன்	செய்கிறேன்	செய்தேன்	-த்-
		ஆ	ஆளுவேன்	ஆளுகிறேன்	ஆண்டேன்	-ன்ட்
		இ	கொல்லுவேன்	கொல்லுகிறேன்	கொன்றேன்	-ன்ற்-
	2		அறிவேன்	அறிகிறேன்	அறிந்தேன்	-ந்த்-
	3		வாங்குவேன்	வாங்குகிறேன்	வாங்கினேன்	-இன்-
	4		விடுவேன்	விடுகிறேன்	விட்டேன்	-ட்-
2 இடைவினை	5	அ	உண்பேன்	உண்கிறேன்	உண்டேன்	-ட்-
		ஆ	என்பேன்	என்கிறேன்	என்றேன்	-ற்-
		இ	கேட்பேன்	கேட்கிறேன்	கேட்டேன்	-ட்-
		ஈ	கற்பேன்	கற்கிறேன்	கற்றேன்	-ற்-
3 வல்வினை	6		படிப்பேன்	படிக்கிறேன்	படித்தேன்	-த்த்-
	7		நடப்பேன்	நடக்கிறேன்	நடந்தேன்	-ந்த்-

4.3 போப்பின் பாகுபாடு

போப் தன்னுடைய நூலில் (Pope (1904) Reprinted. in 1979:46) வினைபற்றிக் கூறும்போது அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். கிரால் கொண்ட வல்வினை, மெல்வினை, இடைவினை என்ற பெயர்களையே இவரும் பயன்படுத்தினாலும் கிரால் செய்த பிரிவுகளுக்கும் இவற்றிற்கும் வேறுபாடுகள் பல உண்டு. வினைகள் வல்வினை, அல்லது இடைவினை, அல்லது மெல்வினை என்றும் அவை எந்த உயிரெழுத்தைக் கொண்டு முடிகின்றன என்றும் அவை செயப்படுபொருள் குன்றிய வினையா அல்லது குன்றா வினையா என்றும் கூறி அவற்றின் அடிப்படையில் அவற்றின் கால இடைநிலைகளை வகுப்பார் இவர். இந்நிலையில் இது சிக்கல்கள் பல நிறைந்துள்ளது. மேலும் இவர் செயவென் எச்சத்தையும் தந்து அதில் காணப்படும் இணைப்புருபையும் (க்க்) தருவார்.

மெல்வினை

-கிறு- எடுப்பவை இறந்த காலத்தில் *-ந்த்-* எடுப்பதுடன் எதிர்காலத்தில் *-வ்-* எடுக்கும். இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றிய வினைகள்.

அடை	அடைகிறேன்	அடைந்தேன்	அடைவேன்	அடைய

இதில் *அறி, ஈ, அடை, அறை, விழு, கழி*, போன்ற பல வினைகள் அடங்கும்.

இடைவினை

-கிறு- எடுப்பவை இறந்தகாலத்தில் *-இன்-* எடுப்பதுடன் எதிர்காலத்தில் *-வ்-* எடுக்கும். இதன் செயப்படுபொருள் குன்றிய வினைகளும் குன்றா வினைகளும் உள்ளன. இவை பொதுவாக உ கொண்டு முடியும்.

அடங்கு	அடங்குகிறேன்	அடங்கினேன்	அடங்குவேன்	அடங்க

வல்வினை

-க்கிறு- எடுப்பவை இறந்தகாலத்தில் *-த்த-* எடுப்பதுடன் எதிர்காலத்தில் -ப்ப்- எடுக்கும். இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றா வினைகள்.

கடி	கடிக்கிறேன்	கடிப்தேன்	கடிப்பேன்	கடிக்க

மேலே காட்டிய மூன்று வகைகளைக் கொடுத்துப் பின்னர்ப் பல வேறு சிறப்பு விதிகளையும் விதிவிலக்குகளையும்தருவார் (அகஸ்தியலிங்கம், பக். 87-88)- வினையியல்- **5.4 ஆர்டனின் பாகுபாடு**

ஆர்டன் என்பவரும் தன்னுடைய A progres give Grammar of Tamil என்ற நூலில் (Arden 1891, as quoted in the fith Edn. 1969: 144) வினைகளைப் பகுத்துள்ளார். வினைச் சொற்கள் கொண்டு முடியும் எழுத்துக்களை அடிப்படையாக வைத்து அவற்றை ஏழு வகைகளாகப் பிரித்துள்ளார்.

1. அ எழுத்தில் முடிவன

2. இ, ஐ, ய் எழுத்தில் முடிவன

3. உ எழுத்தில் முடிவன

4. ண், ன் எழுத்தில் முடிவன

5. ர், ழ் எழுத்தில் முடிவன

6. ல், ள் எழுத்தில் முடிவன

7. நெட்டெழுத்தில் முடிவன

4.4. தமிழ்ப் பேரகராதியின் பாகுபாடு

சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரகராதியும் (Tamil Lexicon,, 1924-36) கிராலின் பகுப்பையே கையாண்டுள்ளது. கிராலின் பகுப்பு பன்னிரு பகுதிகளைக் (உட்பிரிவுகள் உட்பட) கொண்டது. ஆனால் பேரகராதி தா, சா, காண் முதலிய முதனிலை திரிந்து வரும் வினைகளை எல்லாம் தனியாகக் கொண்டு பதிமூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பகுப்பினைக் கீழே காணலாம்.

	வினைப்பகுதி (Root)	**நிகழ்கால முற்று (present tense)**	**இறந்தகால முற்று (past tense)**	**எதிர்கால முற்று (future tense)**	**நிகழ்கால வினையெச்சம்;; (Infinitive)**
1	செய்	செய்கிறேன்	செய்தேன்	செய்வேன்	செய்ய
2	ஆள் ஆளு	ஆள்கிறேன் ஆளுகிறேன்	ஆண்டேன்	ஆள்வேன் ஆளுவேன்	ஆள
3	கொல் கொல்லு	கொல்கிறேன் கொல்லுகிறேன்	கொன்றேன்	கொல்வேன்	கொல்ல
4	அறி	அறிகிறேன்	அறிந்தேன்	அறிவேன்	அறிய
5	ஆக்கு	ஆக்குகிறேன்	ஆக்கினேன்	ஆக்குவேன்	ஆக்க
6	நடு	நடுகிறேன்	நட்டேன்	நடுவேன்	நட
7	உண் உண்ணு	உண்கிறேன் உண்ணுகிறேன்	உண்டேன்	உண்பேன் உண்ணுவேன்	உண்ண
8	தின் தின்னு	தின்கிறேன் தின்னுகிறேன்	தின்றேன்	தின்பேன் தின்னுவேன்	தின்ன
9	கேள்	கேட்கிறேன்	கேட்டேன்	கேட்பேன்	கேட்க
10	கல்	கற்கிறேன்	கற்றேன்	கற்பேன்	கற்க
11	தீர்	தீர்க்கறேன்	தீர்த்தேன்	தீர்ப்பேன்	தீர்க்க
12	நட	நடக்கிறேன்	நடந்தேன்	நடப்பேன்	நடக்க
13	தா, சா, காண் முதலியன முதனிலை திரிந்தும் பிறவாறும் வேறுபடும் வினைகள் ஆகும்.				

4.5. லிஸ்கரின் பாகுபாடு

1951-இல் லிஸ்கர் (Lisker, 1951) தமிழ் வினைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்: *த்-* எடுப்பன ஒரு பிரிவாகவும், *-ன்-* எடுப்பன மற்றொரு பிரிவாகவும், *-ற்ற்-* எடுப்பன இன்னொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டன. *-த்த்-* எடுப்பவனவற்றை (வல்வினையை) இவர் தகரப் பிரிவுடன் இணைத்தார். இது வரையிலும் *-த்த்-* எடுக்கும் வினைச் சொற்களை வல்வினை எனப் பிரித்துத்

தனியொரு பிரிவாகக் கண்டதை இவர் தகர ஒற்றையெடுக்கும் வினைகளுடன் இணைத்தது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இதற்காக இவர் கையாண்ட முறையும் புதியதொரு முறையாகும். வல்வினைகள் அனைத்தும் ஏதோ ஒரு உருபொலியனைக் (morphophoneme) கொண்டு முடிகின்றன என்றும் அதன் காரணமாகத்தான் அவை *-ப்ப்-*, *-த்த்*, *-க்க்-* ஆகியவற்றை எடுத்து வருகின்றன என்றும் கூறினார். எனவே இவ்வினைகளும் பிற வினைகளைப் போலவே *-த்-*, *-ந்த்-* ஆகியவற்றை இறந்த காலத்திலும் பகர ஒற்றை எதிர் காலத்திலும் கொண்டுள்ளன என்றும் வினையில் உள்ள உருபொலியனின் தாக்கத்தினால் தான் இவை இரட்டிக்கின்றன என்றும் இவ்வொலியனை "x" ஆகக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

x + த் > த்த்

x + ப் > ப்ப்

என வரும் விதியால் இதனை விளக்கலாம் என்று விவரித்தார். இவர் கருத்துப்படி *படி, கொடு, நட* போன்ற வினைகள் படிx, நடx, கொடுx, கிடx என x ஒலியனில் முடிபவை என்றும் இவற்றுடன் *-த்-* போன்ற இடைநிலைகள் இணையும் போது *-த்த்-* ஆகின்றன எனவும் விளக்கலாம். இந்நிலையில் வல்வினை, மெல்வினை, பகுப்பும் தேவையற்றதாக உள்ளது.

பாகுபாடு			**கால ஒட்டுகள்**	**இறந்தகாலத் திரிபுற்ற வடிவங்கள்**
பிரிவு I	1	அ	த் வ் கிறு	செய்தேன்
		ஆ	த் வ் கிறு	மாண்டேன்
		இ	த் வ் கிறு	சென்றேன்
	2		த்(>ட்) வ் கிறு	விட்டேன்
	3		த்(>ட்) ப் கிறு	உண்டேன்
	4		த்(>ற்) ப் கிறு	தின்றேன்
	5		(>ட்) ப் கிறு	கேட்டேன்
	6		த் (>ற்) ப் கிறு	தோற்பேன்
	7		த் (>த்த்) ப்ப் க்கிறு	பார்த்தேன்

பிரிவு II	8		ந்த் வ் கிறு	விழுந்தேன்
	9		ந்த் ப்ப் க்கிறு	நடந்தேன்
பிரிவு III	10		இன் வ் கிறு	ஓடினேன்

இவர் இவற்றைப் பின்வருமாறு காட்டுகிறார்:

I. கிற் த் வ்

II. கிற் ந்த் வ்

III. கிற் இன் வ்

முதல் பிரிவும் இரண்டாவது பிரிவும் வல்வினைகள் அடங்கியனவாகும்

4.6. குமாரசாமிராஜாவின் பாகுபாடு

குமாரசாமிராஜா "தமிழ் தெரியாதவர்களுக்கு" (குமாரசாமிராஜா 1960) என்ற கட்டுரையில் தமிழ்வினைகளை ஆறு பிரிவாகப் பிரித்துள்ளார். இவற்றை அவை ஏற்று வரும் கால இடைநிலைகளை அடிப்படையாக வைத்தே பிரித்துள்ளார்.

ப.எண்	திரிபு	எடுத்துக்காட்டு	ஈறெழுத்து
1.	த்-கிற்-வ்	உழு, வை, கொய், உண், தின்	உ, ஐ, ய், ண், ன்
2.	ந்த்-கிற்-வ்	அறி, ஈ, விழு, அறை, பாய், படர், பிறழ், ஆள், கொல்	இ, ஈ, உ, ஐ, ய், ர், ழ், ள், ல்
3.	இன்-கிற்-வ்	அஞ்சு	உ
4.	-கிற்-வ்	நகு	உ
5.	த்த்-க்கிற்-ப்ப்	தளதள, கா, அடி, நீ, உடு, பூ, அமை, கோ, எய், வேர், சிமிழ், கேள், கல்	அ, ஆ, இ, ஈ, உ, ஐ, ஓ, ய், ர், ழ், ள், ல்
6.	ந்த்-க்கிற்-ப்ப்	அள, அண்ணா, இரு, மோ	அ, ஆ, உ, ஒ

4.7. கோதண்டராமனின் பாகுபாடு

கோதண்டராமனும் (Kothandaraman 1972: 45-55) தமிழ் வினைகளை அவை கொண்டு முடியும் ஈறுகளை அடிப்படையாக வைத்துப் பிரித்துள்ளார். இந்நிலையில் ஒரு சில வினைகள் விதிவிலக்காக உள்ளன. பல்வேறு வினைப்பாகுப்பாடுகளை வரிசையாக தந்து இறுதியில் வினைகள் அனைத்தையும் அவற்றின் ஈறுகளை அடிப்படையாக வைத்துப் பிரித்துள்ளார்.

வினை	**ஈறு**	**காலத்திரிபுகள்**
செய்	-ய்	த் கிற் வ்
வை	-ய்	
ஆள்	-ள்	ந்த் கிற் வ்
கொல்	-ல்	
அறி	-இ	
ஈ	-ஈ	
எழு	-உ	
அளை	-ய்	
தேய்	-ய்	
சேர்	-ர்	
வாழ்	-ழ்	
அஞ்சு	-உ	இன் கிற் வ்
நகு	-க்	த் உகிற் வ்
நடு	-ட்	
பெறு	-ற்	
உண்	-ண்	த் கிற் ப்
தின்	-ன்	
கேள்	-ள்	+-K த் கிற் ப்
கல்	-ல்	
கன	-அ	
கா	-ஆ	
குறி	-இ	

சீ	-ஈ	
கொடு	-உ	
பூ	-ஊ	
அழை	-ஐ	
சோ	-ஓ	
மொய்	-ய்	
பார்	-ர்	
அவிழ்	-ழ்	
நட	-அ	ந்த் க்கிற் ப்

இவர் கருத்துப்படி வினைகளின் இறுதி எழுத்துகளுக்கேற்ப அவை பல இடைநிலைகளை ஏற்கின்றன. *க், ட், ற், ண், ன்* ஆகியவற்றில் இறுதியுறும் வினைகளும் -K உருபொலியெலின் இறுதியும் வினைகளும் (C)Vய் என்ற அமைப்பைக் கொண்டு யகரத்தில் இறுதியுறுவனவும் *-த்-* என்பதை இறந்தகால இடைநிலையாக ஏற்கும். உகரத்தில் முடிபவை ((C)VCஉ (*எழு*) ஒழிந்தவை) *-இன்-* எடுக்கும்; உகரத்தில் முடிகின்ற *அழு, உழு, இரு, தொழு* ஆகிய வினைகள் இவற்றில் அடங்கா. இவற்றை விதிவிலக்காகக் கொள்ளவேண்டும். இவை *அழுதான், உழுதான், பொருதான், இருந்தான்* என இவை வரும். இவை தவிர பிற வினைகள் அனைத்தும் *-ந்த்-* ஏற்று வரும். நிகழ்காலம் *-உகிற்-*, *-கிற்-* என்ற மாற்றுருபுகளைக் கொண்டவை. *-க், -ட், -ற்* ஆகியவற்றை ஈறாகக் கொண்டவை (*புகுகிறான், நடுகிறான், பெறுகிறான்*) *-உகிற்-* ஏற்கும். *புகு, நடு, பெறு* போன்றவற்றை இவர் முறையே *க், ட், ற்* ஈறாகக் கொண்டனவாக எடுத்துக்கொள்கிறார். பிற வினைகள் அனைத்தும் *-கிற்-* ஏற்கும். எதிர்காலம் *-உவ்-, -வ்-, -ப்-* என்ற மூன்று மாற்றுருபுகளைக் கொண்டது. *க், ட், ற்* (*புக், நட், பெற்*) ஈற்று வினைகள் *-உவ்-* எடுத்தும், *-மு, ண், ன், அ* (*நட*) ஆகிவற்றை ஈறாகக் கொண்ட வினைகள் *-ப்-* ஏற்றும் பிற வினைகள் *-வ்-* ஏற்றும் வரும். எனவே ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர (*ஆகு, சா, தா, வா, அழு, இரு, உழு, தொழு, வோ, நை, நோ,*

போ, சொல், நில்) மீதி வினைகள் அனைத்தும் இவர் பகுப்பில் ஒரே பிரிவில் அடங்கி நிற்கின்றன. இந்நிலையில் இவர் பகுப்பு சிறந்திருக்கின்து.

ஆள், கொல் போன்ற வினைகள் *-ந்த்-* எடுத்து வரும் எனக் கூறுவதும் உகர இறுதி வினைகள் *-இன்-* எடுத்து வரும் என்பதும் *கேள், கல்* போன்றவற்றை -K இறுதியாகக் கொள்ளுவதும் கவனத்திற்கொள்ளவேண்டியன. *நட* போன்றவற்றை -K என்பதை இறுதியில் ஏற்று வரவில்லை. இதனால் இவ்வினைகளில் வரும் *-க்க்-*, *-ப்ப்-* ஒற்றுக்களுக்கெனத் தனி விதிகள் வேண்டியிருக்கும். பல பகுப்புகளில் இப்பகுப்பே இறுதி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பகுப்பு (phonologically conditioned) எனக் கருதலாம் (அகத்தியலிங்கம், 1982:98).

4.8.அகத்தியலிங்கத்தின் பாகுபாடு

பொதுவாக காலம் காட்டும் இடைநிலைகள் வினைச்சொற்களுடன் வருவதோடு செயப்படுப்பொருள் காட்டும் ஒட்டுகளுடனும் வருகின்றன.

நட+ந்த்+ஆன் > நடந்தான்

நட+த்த்+இன்+ஆன் > நடத்தினான்

இந்நிலையில் கால இடைநிலைகள் செயப்படுப்பொருள் குன்றியவினை, குன்றாவினை என்ற பகுப்பையும் பொருத்துள்ள நிலைமையில் அப்பகுப்பை உள்ளடக்கவேண்டும் என்ற நிலையில் அகத்தியலிங்கம் (1971) வினைகள் அனைத்தையும் அவை ஏற்கும் கடந்த கால ஒட்டுக்களை அடிப்படையாக வைத்து முதலில் மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பின்னர் எவை எவை இயற்கைச் செயப்படுபொருள் குன்றாவினை என்றெல்லாம் பகுத்துள்ளார். இப்பகுப்பின்படி செயப்படுபொருள் குன்றா-குன்றிய வினைகள் பற்றிய நல்லதொரு தெளிவான எண்ணமும் ஏற்படும். வினைகள் அனைத்தும் *-த்-* (இவற்றுள்´யை இறுதியாகக் கொண்டவையும் அடங்கும்) எடுப்பவை, -இன்- எடுப்பவை, *-ந்த்-* எடுப்பவை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். மீண்டும்

இப்பிரிவுகள் இயற்கைச் செயப்படுபொருள் வினைகள் (இ.செ.வி.) என்றும் செயப்படுபொருள் குன்றிய வினைகள் (செ.கு.வி) என்றும் இரண்டும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

-த்-

இ.செ.வி	செ.கு.வி.
செய்	பெய்
சாப்பிடு	அழு
பெறு	கெடு
அடி	படு

இன்

இ.செ.வி	செ.கு.வி
வாங்கு	இரங்கு
	மூழ்கு
	கலங்கு
	விளையாடு

ந்த்

இ.செ.வி	செ.கு.வி
அறி	கீழ்படி
எறி	இற
	இரு
	அழி
	நட

செயப்படுபொருள் குன்றிய வினைகளில் சில ஒட்டுகளால் செயப்படுப்பொருள் குன்றாவினைகளாக மாறுவன: சில மாறாதவை. இந்நிலையில் இவற்றை மீண்டும் இரண்டிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதற் பிரிவில் (-த்-) *பெய், அழு* போன்ற வினைகள் செயப்படுபொருள் குன்றாவினைகளாக மாறாதவை. ஆனால் *கெடு, படு* ஆகியவை பின்வருமாறு செயப்படுபொருள் குன்றா வினைகளாக மாறும்.

கெடு+x+த்+ஆன் > கெடுத்தான்

படு+த்த்+இன்+ஆன் > படுத்தினான்

x, *-த்த-* ஆகியவைச் செயப்படுப்பொருள் காட்டும் ஒட்டுகள். இரண்டாவது பிரிவில் இறங்கு, மூழ்கு செயப்படுப்பொருள் குன்றா வினைகளாக மாறா. ஆனால் *கலங்கு* போன்றவை மாறுவன (>*கலக்க*). மூன்றாவது பிரிவில் *கீழ்ப்படி, இற* போன்றவை செயப்படுப்பொருள் குன்றா வினைகளாக மாறா. ஆனால் *அழி, நட* போன்றவை பின்வருமாறு மாறும் தன்மையன.

அழி+ x +த்+ஆன்>அழித்தான்

நட+ x +த்+இன்+ஆன்>நடத்தினான்

ஆக்கச் செயப்படுப்பொருளில் வரும் வினைகள் கீழே உள்ள நிலையைக் காட்டும்.

பிரிவு		**செயப்படுபொருள் ஒட்டு**	**அதன் பின்னர் வரும் இறந்தகால இடைநிலை ஒட்டு**
I	-த்-	-x- -த்த்-	-த்- -இந்
II	-இன்-	-த்-	-இன்
III	-ந்த்-	-x- -த்த்-	-த்- -இந்

எனவே ஆக்கச் செயப்படுபொருள் வினைகள் *-த்-, -இன்-* ஆகிய இரண்டு ஒட்டுக்களையே எடுத்து வருகின்றதைக் காண்கிறோம். இவ்வினைகள் *-ந்த்-* எடுப்பதில்லை. மேலும் இவை பிரிவு மாறுவதையும் காணலாம். முதல் பிரிவில் உள்ள கெடு என்ற வினை செயப்படுபொருள் வினையாக

மாறின விடத்தும் *-த்-* ஒட்டையே எடுக்க *படு* என்ற வினை *படுத்து* என மாறும் போது *-இன்-* பிரிவுக்கு மாறிவிடுவதை உணரலாம். இரண்டாவது பிரிவில் கலங்கு போன்றவை கலக்கு என மாறின போதிலும் அவை பிரிவு மாறாது *-இன்-* ஒட்டையே எடுத்து நிற்கக் காண்கிறோம். ஆனால் மூன்றாவது பிரிவில் காணப்படும் *அழிந்தது* போன்ற வினைகள் *அழித்தது* என்று மாறும் போது முதல் பிரிவுக்கு மாறிவிடுகின்றன. அதைப் போன்றே *நடந்தான்* போன்றவை *நடத்தினான்* என மாறும் போது இரண்டாவது பிரிவுக்கு (*இன்* எடுக்கும் வினைப் பிரிவு) மாறிவிடுகின்றன. வினைகளைச் செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினை எனப் பிரிப்பது தொடரியல் அடிப்படையிலாகும். இவற்றைத் தன்வினை, பிறவினை எனப் பிரிப்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது. செயப்படுபொருள் காட்டும் எனக் கூறுவதும் தவறே பிறவினை காட்டுகின்ற அனைத்தும் செயப்படுபொருளாக வரும் நிலையில் அவற்றைத் தன்வினை, பிறவினை எனக் கூறுவதே பொருத்தம்.

4.9. பாலசுப்பிரமணியம் பாகுபாடு

பாலசுப்பிரமணியம் (Balasubramanian 1981) செய்த வகைப்பாடு குறிப்பிடத் தக்கதாகும். இவர் வினைகளை நான்கு பிரிவுகளாகப் புரிப்பார்:

1. வினைப்பகுதியில் காணப்படும் வல்லொலி இரட்டிப்பதால் இறந்தகாலம் காட்டும் வினைகள்.
2. தகர ஒற்றை எடுத்து இறந்த காலம் காட்டுவன.
3. -ந்த்- எடுத்து இறந்த காலம் காட்டுவன.
4. -இன்- எடுத்து இறந்த காலம் காட்டுவன.

தகர ஒற்றை எடுத்து வரும் வினைகள் மீண்டும் P என்ற உருபொலியனைக் கொண்டு முடியும் வினைகள் (வல்வினைகள்) என்றும் அல்லாத வினைகள் என்றும் பிரிக்கப்படுகின்றன. இது போன்றே *-ந்த்-* எடுத்து வரும் வினைகளும் P ஒலியனைக் கொண்டவை என்றும் (வல்வினைகள்)

அல்லாத வினைகள் என்று பிரிக்கப்படும். இந்நிலையில் வல்வினைகள் அனைத்தும் P ஒலியனைக் கொண்டு முடிவனவாகக் கருதப்படுகின்றன. இடைவினைகளிலும் *கேள், கல்* போன்ற வினைகளும் வல்வினைகளாகவே கருதப்படுகின்றன. வல்வினைகளை லிஸ்கர் × என்ற உருபொலியனை வைத்து விளக்குவது பொருந்தாது என்பது இவர் வாதம்.

× வரும் எல்லாவிடத்தும் வல்லொலியன் வரும் நிலையில் ஒரு வல்லொலியனை (plosive) வைத்து விளக்குவதே பொருத்தம் என்பது இவர் எண்ணம். இது கருதியே கோதண்டராமனும் 'K'' உருபொலியனை வைத்து விளக்கி இருப்பது இங்குக் கருதத்தக்கது. முதல் பிரிவில் *அடு, விடு, தொடு, அறு, உறு, பெறு, நகு, தொகு* போன்ற வினைகள் அடங்கும். இவற்றில் வரும் வல்லின மெய்கள் இரட்டிப்பதால் இறந்த காலத்தைக் காட்டும் எனக் கூறுவது மரபிலக்கணத்தை ஒட்டியதாகும்.

அடு >*அட்டு*

அறு >அற்று

தொகு > தொக்கு

என வரும் நிலையில் இறந்த காலம் காட்டும். நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் காட்டுவனவாக முறையே கிற், வ் என்பவை உள்ளன. இரண்டாவது பிரிவில் P கொண்டு முடிகின்ற வினைகள் வருகின்ற ஒலியன்களுக்கேற்ப பல மாறுதல்களை அடையும். எடுத்துக்காட்டாக அடிP போன்றவை இறந்தகாலத்தில் அடிP +த் > அடித்+த் எனவும், நிகழ்காலத்தில் அடிP +கிற்>அடிக்+கிற் எனவும், செயவென் எச்சத்தில், *அடிP*+க+*அ*>*அடிக்க* என வருதல் காணலாம். மேலும் இப்பிரிவின் கண், கேள்P, கல்P போன்ற வினைகளும் அடங்கும். இவையும் வரும் வல்லின மெய்களுக்கேற்பப் பல மாற்றங்களைக் கண்டு இறுதியாக *கேட்ட* (*கேட்டான்*), *கேட்ப்* (*கேட்பான்*), *கேட்க்* (*கேட்க*), *கற்ற* (*கற்றான்*), *கற்ப்* (*கற்பான்*), *கற்க்* (*கற்கிறான்*) போன்றவற்றை உருவாக்கி நிற்கும். இரண்டாவது பிரிவில் காணப்படும் வல்வினை அல்லாத வினைகளும் தகர ஒற்றையே

இநற்தகால உருபாகக் கொண்டும் வரும். அழ, உண், தின், செய் போன்றவை இப்பிரிவில் அடங்கும். இவற்றுள் *ண், ன்* கொண்டு முடிபவை பகர ஒற்றை எடுத்து எதிர்காலம் காட்டும் என்பார்.

மூன்றாவது பிரிவு வினைகள் *-ந்த்-* எடுத்து இறந்த காலம் காட்டும். இதன்கண் -P கொண்டு முடியும் வினைகளும் *கொல், ஆள்* போன்ற வினைகளும் பிற வினைகளும் அடங்கும். P- கொண்டு முடிபவை வல்வினைகளாகும். இவை எதிர்காலத்தில் பகர ஒற்றை எடுத்து வரும். P +ப் > ப்+ப் போன்ற விதிகளைப் பயன்படுத்தி விளக்க முடியும். நான்காவது பிரிவு வினைகள் அனைத்தும் உகரத்தில் முடிவன. இவை *-இன்-* எடுத்து இறந்தகாலத்தையும், *-கிற்-*, -வ்- ஆகியவற்றை எடுத்து முறையே நிகழ், எதிர்காலங்களையும் காட்டும். கோதண்டராமனும் இவற்றை உகர ஈறாகவே கொண்டுள்ளார்.

I	விடுவேன்	விடுகிறேன்	விட்டேன்	P > PP
	அறுவேன்	அறுகிறேன்	அற்றேன்	
	புகுவேன்	புகுகிறேன்	புக்கேன்	
II	அடிப்பேன்	அடிக்கிறேன்	அடித்தேன்	-த்-
	கேட்பேன்	கேட்கிறேன்	கேட்டேன்	
	கற்பேன்	கற்கிறேன்	கற்றேன்	
	அழுவேன்	அழுகிறேன்	அழுதேன்	
	செய்வேன்	செய்கிறேன்	செய்தேன்	
	உண்பேன்	உண்கிறேன்	உண்டேன்	
	தின்பேன்	தின்கிறேன்	தின்றேன்	
III	நடப்பேன்	நடக்கிறேன்	நடந்தேன்	-ந்த்-
	கொல்வேன்	கொல்கிறேன்	கொன்றேன்	
	ஆள்வேன்	ஆள்கிறேன்	ஆண்டேன்	

	அறிவேன்	அறிகிறேன்	அறிந்தேன்	
	தருவேன்	தருகிறேன்	தந்தேன்	
IV	வாங்குவேன்	வாங்குகிறேன்	வாங்கினேன்	-இன்-

இப்பகுப்பில் பல வேறு சிக்கல்கள் விளக்கப்படுகின்றன. இதற்கு முன்னரே பலர் உருபொலியனாக வல்லொலியனைக் கொண்டிருந்தபோதிலும் இதற்குரிய காரணம் காட்டி விளக்கிய பெருமை பாலசுப்பிரமணியத்தையே சாரும். இதுபோன்றே *அடு, விடு* போன்ற வினைகளைச் சேர்க்கை முறையில் (Item and Arrangement) விளக்காது விதி முறையில் (Item and Procces) விளக்குவது பொருத்தும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்குக் காரணம் மொழியியல் உலகில் கண்ட மாற்றமாகும். பொதுவாக விளக்கங்கள் சேர்க்கை முறை அல்லது விதிமுறையில் இருக்க வேண்டும் எனவும் இரண்டு முறைகளையும் கலந்து செய்யக்கூடாது எனவும் முன்னர் எண்ணப்பட்டது. ஆனால் இப்போது இவ்வாறு கலந்து இருப்பதனால் குறையொன்றும் இல்லை என்ற கருத்து நிலவுகிறது. இதனால்தான் முன்னர் வகைசெய்த பலர் சேர்க்கை முறை ஒன்றையே கைக்கொண்டு விளக்கினர். மேலும் *-இன்-* எடுப்பவை அனைத்தும் உகரத்தில் முடிவன என்பதும் விளக்கப்படுகிறது. இந்நிலையில் இது நல்ல ஒரு வகைப்பாடாகவே உள்ளது.

5. சீரான-சீரற்ற வினைப் பாகுபாடு

வினைகளின் பகுதி மற்றும் காலப் பின்னொட்டுகளின் உருபொலியனியல் நடத்தை வேறுபாடு காரணமாக வினகள் சீரான, சீரற்ற வினைகள் எனப் பாகுபடுத்தப்பட்டன. வினைகள் சீரானவை மற்றும் சீரற்றவை என்ற பாகுபாடு, ஆங்கிலத்திற்கு அல்ஃபோன்ஸ் ஜூய்லாண்ட் மற்றும் ஜேம்ஸ் மாரிஸ் (Alphonse Juilland and James Macris) செய்த பாகுபாடு அடிப்படையில் செய்யப்பட்டது. இது பற்றி விரிவாக இங்கு விளக்கப்படும். இங்கு நிகழ்வெண் முக்கியமானதல்ல. ஆனால் பகுதி (stem) மற்றும் காலப் பின்னொடுகளின் வேறுபாடு முக்கியமானதாகும். அவைகள்

ஜுய்லாண்ட் மற்றும் ஜேம்ஸ் மாரிஸ் பின்பற்றி சீரான வினைகள், சீரற்ற வினைகள் எனப் பாகுபடுத்தப்பட்டன.

வினையடிகளில் சில மாற்றுருபுகளைக் கொண்டிருக்கும் சில மாற்றுருபுகளைக் கொண்டிராதிருக்கலாம். ஹாக்கெட் கூறியுள்ளது போல் உருபன்களை மாற்றுருபகளைக் காட்டும் வடிவங்கள் மற்றும் மாற்றுருபுகளைக் காட்டா வடிவங்கள் எனப் பகுக்கலாம். வினையடிகள் அடிப்படையான சொற்பொருளைக் கொண்டிருப்பதால் அவை "கருத்துக்கள்" (themes) எனப்படும். கால பின்னொட்டுக்கள் வினைகளின் திரிபு பின்னொட்டுக்களாகும். வினையடிகளை அவற்றின் உருபொலியனியல் அபைபு அடிப்படையில் பகுப்பது "கருத்து பகுப்பு" (thematic classification) எனப்படும் மற்றும் கால பின்னொட்டுகளால் பகுப்பது "திரிபு பகுப்பு" (inflectional classification) எனப்படும். கருத்து மற்றும் திரிபு என்பனவற்றை இணைத்து வினைகளின் வேறுபட்ட வகைகளை உருவாக்கலாம். இம்மாதிரியான பகுப்பு "கருத்து மற்றும் திரிபு பகுப்பு" (thematic and inflectional classification) எனப்படும். அல்போன்ஸ் ஜுஇலாண்ட் மற்றும் ஜேம்ஸ் மாக்ரிஸ் (Alphonse Juilland and James Macris) என்போர் ஆங்கில வினைகளை இவ்வளவீட்டு அடிப்படையில் பகுத்துள்ளனர். இது நான்கு வகைப்பாடுகளைக் கொண்டது. அவைகள் பின்வருமாறு அமையும்:

1. வினைகள் வேறுபடாத மாற்றுருபுகளைக் கொண்டிருந்தால் அவை கருத்தால் சீரான வினைகளாகும்.

2. இதுபோல் வினைகள் மாற்றுருபுகளைக் கொண்டிருந்தால் அவை கருத்தால் சீரற்ற வினைகளாகும்.

3. இதே வழியில், வினையடிகள் கால மாற்றுருபுகளில் ஒன்றை மட்டும் ஏற்குமானால் (அதாவது அவை ஒரே ஒரு வினைத்திரிபு வகையைச் சாருமானால்) அவை திரிபால் சீரானவை எனப்படும்.

4. வினையடிகள் ஒன்றிற்கும் மேற்பட்ட கால மாற்றுருபன்களுடன் வருமானால் (அதாவது அவை ஒன்றிற்கும் மேற்பட்ட வினைத்திரிபு வகையைச் சாருமானால்) அவை திரிபு அடிப்படையில் சீரற்றவை எனப்படும்.

இவ்வகையிலான பாகுபாட்டை தமிழ் வினையடிகளுக்கும் பயன்படுத்தி வினையடிகளைப் பகுக்கலாம்.

1. சீரான மற்றும் சீரற்ற வகைகள்- தமிழ் வினைகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் (பழந்தமிழ்) வகை 1: சீரான வினைகள்

வினை	திரிபுற்ற வடிவம்	நூல்
அணி ‘wear’	அணிந்து ‘having worn’	புறநானூறு 151:3
அப்பு ’put on’	அப்பி ‘having put on’	அகநானூறு 389:5
அளப் ‘measure’	அளந்து ‘having measured’	பதிற்றுப்பத்து 24:16
இழுகு ’paint	இழுகி ‘having pained’	புறநானூறு 281:3
உமிழ்	உமிழ்ந்து	பதிற்றுப்பத்து 33:8
ஓடு	ஓடி	புறநானூறு 49:11
தழு	தழீய தழுவிய	பதிற்றுப்பத்து 30:2

வகை 2: கருத்தால் சீரற்றவை

வினை	திரிபுற்ற வடிவம்	நூல்
அகல் ~ஆல்	அகன்று ஆன்று	அகநானூறு 271:12 அகநானூறு 158:2
சிரறு ~ சீறு	சிரறிய சீறி	பத்துப்பாட்டு 2:124 பதிற்றுப்பத்து 63-10

ஞரல் ~ நரல்	ஞரல நரல	பத்துப்பாட்டு 1:120 பத்துப்பாட்டு 6:185
சிரற்று ~ இரற்று	சிரற்று	அகநானூறு 191-4
விடுP ~ விடு	விடுத்து விட்டு	ஐங்குறுநு}று 466:2 ஐங்குறுநூறு 268:5
வீய் ~ வீ	வீயந்து வீந்து	குறுந்தொகை 149:4 குறுந்தொகை 165:4 வகை

P = என்பது இங்கும் இதைத் தொடர்ந்தும் ஒரு உருபொலியனியல் (morphophonemic) ஒட்டு ஆகும். இது குறித்து பாலசுப்பிரமணியத்தின் வினைப் பாகுபாடு (Balasubramaniyam 1981) பற்றி பேசும் போது விரிவாக் கூறப்பட்டுள்ளது.

வகை 3: திரிபால் சீரற்றவை

வினை	திரிபுற்ற வடிவம்	நூல்
அசைP 1-உம் 2-உம்	அசைத்த அசைஇ	அகநானூறு 301-22 அகநானூறு 188-12
அரி 2-உம் 3-உம்	அரிந்து அரீஇ	அகநானூறு 116-2 பதிற்றுப்பத்து 6-379
அறி 1-உம் 2-உம்	அறிந்து அறீஇ	அகநானூறு 201-2 அகநானூறு 392-4
உரைP 2-உம் 3-உம்	உரைத்து உரைஇ	அகநானூறு 203-2 பரிபாடல்
சினP 2-உம் 3-உம்	சினந்து சினைஇ சினவிய	நற்றிணை 300-1 புறநானூறு 2-13 நற்றிணை 100-6

துனை 2-உம் 3-உம்	துனைந்து துனைஇ	புறநானூறு7-37 நற்றிணை 296-7
பொறுP 1-உம் 3-உம்	பொறுத்து பொறீஇ	கலித்தொகை 142-55 கலித்தொகை 94-11
மறை 2-உம் 3-உம்	மறைந்து மறைஇ	குறுந்தொகை 319-2 ஐங்குறுநூறு 115-3

வகை 4: சீரற்றது

வினை	***திரிபுற்ற***	**வடிவம் நூல்**
ஈ (1) ஈய் (3) ஈ (2)	ஈத்து	கலித்தொகை 142:55
உணு (3) உண் (1)	உணீஇய உண்டு	ஐங்குறுநூறு 268:2 ஐங்குறுநூறு 203:4
செலு (3) ஞெமிர்	செலீஇ சென்று	நற்றிணை 54:1 நற்றிணை 69:2
ஞெமிறு (3) ஞெமிர் (2)	ஞெமிரிய ஞெமிர்ந்து	பத்துப்பாட்டு 7:90 பத்துப்பாட்டு 6:243
நினை(3, 2) நினை (1)	நினைஇ நினைந்து நினைத்து	ஐங்குறுநூறு 486:1 ஐங்குறுநூறு 118:4 குறுந்தொகை 99:2

2. உருபொலியனியல் சீரின்மை மற்றும் இறுதி பாகுபாடு

தமிழ் வினைகளை இந்த நான்கு வகைப்பாடுகளில் அடக்கலாம். 1-4 வரையுள்ள பாகுபாடுகளில் அடக்கப்படும் வினைகளுக்கிடையில் சில வேறுபாடுகள் காணப்படும். இவ்வேறுபாடுகள் அவற்றின் உருபொலியனியல் நடத்தையில் உள்ளது. எடுத்துக்காட்டாகத் *தழு*

மற்றும் ஓடு என்பன 1-ஆம் வகைப்பாட்டைச் சார்ந்தாலும் அவை உருபொலியனியல் நடத்தையில் வேறுபடும். வினையெச்ச வடிவம் *ஓடு+இ* எப்போது *ஓடி* என்பதுதான். ஆனால் *தழு* என்பதன் வினையெச்சவடிவம் *தள்ளு+இ > தழுவி* அல்லது *தழீஇ* என்பதாகும். *ஓடு* மற்றும் *தழு* என்ற முதல் வகையைச் சார்ந்த கருத்தால் சீரான இவ்வனைகளை உருபொலியனியல் அடிப்படையில் இரண்டு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. *ஓடு* போன்ற வினைகளை உள்ளடக்கிய உருபொலியனியல் அடிப்படையில் சீரான வினையடிகள்.

2. *தழு* போன்ற வினையடிகளை உள்ளடக்கிய உருபொலியனியல் அடிப்படையில் சீரற்ற வினையடிகள்.

இதேபோல் இரண்டாவது வகையைச் சார்ந்த கருத்தால் சீரற்ற வினைகளை இரு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. உருபொலியனியல் அடிப்படையில் சீரான வினையடிகள்.

2. உருபொலியனியல் அடிப்படையில் சீரற்ற வினையடிகள்.

எடுத்துக்காட்டாகக் *கவ ~ கவைஇ* என்ற வினைக்கு மூன்று இறந்தகால வடிவங்கள் உள்ளன: இவற்றில் *கவ* என்பதற்குக் கீழ்கண்டவாறு இரண்டு இறந்தகால வடிவங்கள் உள்ளன:

கவ + இ > கவஇ, கவவி

கவைஇ (வினையெச்சம்) நற்றிணை 350:10

கவவி (வினையெச்சம்) கலித்தொகை 35:11

மூன்றாவது இறந்தகால வடிவம் *கவைஇ* என்ற வினையடியிலிருந்த ஆக்கப்பட்டுள்து: *கவைஇ+இ> கவைஇயி* [(எ.கா. *கவைஇயினள்* (வினைமுற்று), குறுந்தொகை 359:6)]. எனவே இவை உருபொலியனியல் அடிப்படையில் சீரற்றவை. சீரற்ற தன்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு:

போ ~ போய்

போய (பெயரெச்சம்) கலித்தொகை 134:7

போய் (வினையெச்சம்) கலித்தொகை 148:23

போயின்று (வினைமுற்று) கலித்தொகை 24:17

இதுபோல் மூன்றாவது வகையைச் சார்ந்த வினைகளும் அவற்றின் உருபொலியனியல் நடத்தை அடிப்படையில் வேறுபடும். எடுத்துக்காட்டாக, *அறி* என்பது இ மற்றும் ந்த் என்பனவற்றை இறந்தகால ஒட்டுக்களாக ஏற்று அறிந்து மற்றும் *அறீஇ* என்ற வினையெச்ச வடிவங்களைப் பெறும். ஆனால் *சின* என்பது *ந்த்* (*சினந்து*) மற்றும் *இ* (*சினவி* அல்லது *சினைஇ*) என்ற இரண்டு இறந்தகால ஒட்டுகளை எடுப்பதுடன் பிந்தைய பின்னொட்டு *இ* என்பது இரு வேறுபட்ட வினையெச்ச வடிவங்களைத் தருகின்றது: *சினவி* மற்றும் *சினைஇ*. *சினைஇ*, *சினவி* மற்றும் *சினந்து* என்ற வடிவங்கள் திரிபால் சீரின்மையைக் காட்டுவதுடன் அவற்றின் உருபொலியனியல் நடத்தையிலும் சீரின்மையைக் காட்டுகின்றன. எனவே 3-ஆது வகுப்பைச் சாரும் வினைகளையும் உருபொலியனியலால் சீரானவை மற்றும் உருபொலியனியலால் சீரற்றவை எனப் பிரிக்கலாம்.

இதேவழியில் கருத்தாலும் திரிபாலும் சீரற்ற 4-ஆவது வகை வினைகளை இரு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. கருத்தாலும் திரிபாலும் சீரற்றவை மற்றும் உருபொலியனியலால் சீரானவை.

2. கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை.

எடுத்துக்காட்டாக, வினைகள்

1. பர (2) ~ பா (2) ‘spread’

2. பாய் (2) ~ பா (3) ‘spread’

வினைவடிவம்	**வினைத்திரிபு**	**நூல்**
பரந்து	வினையெச்சம்	குறுந்தொகை 355:2

பாஅய்	வினையெச்சம்	குறுந்தொகை 380:1
பாய	பெயரெச்சம்	குறுந்தொகை 343:7
பாய்ந்து	வினையெச்சம்	குறுந்தொகை 195:5
பாஅய்	வினையெச்சம்	குறுந்தொகை 180:1
பாய	பெயரெச்சம்	குறுந்தொகை 143:7

கருத்து, திரிபு மற்றும் உருபொலியனியல் அடிப்படையில் மற்றும் சீர்மை மற்றும் சீரின்மை அடிப்படையில் வினைகளின் பாகுபாடு பின்வருமாறு அமையும்:

1.அ கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரானவை

எ.கா. *ஓடு*

1.ஆ. கருத்தாலும் திரிபாலும் சீரானவை ஆனால் உருபொலியனியலால் சீரற்றவை எ.கா. *தழு*

2.அ. திரிபாலும் உருபொலியனியலாலும் சீரானவை ஆனால் கருத்தால் சீரற்றவை

எ.கா. *ஞரல் நரல்*

2.ஆ. கருத்தாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை ஆனால் திரிபால் சீரானவை எ.கா. *கவ* மற்றும் *கவைஇ*

3.அ. கருத்தாலும் உருபொலியனியலாலும் சீரானவை ஆனால் திரிபால் சீரற்றவை *அசைP*

3.ஆ. திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை ஆனால் கருத்தால்; சீரானவை எ.கா. *சினP*

4.அ. கருத்தாலும் திரிபாலும் சீரற்றவை ஆனால் உருபொலியனியலால்; சீரானவை எ.கா.*முயலு முயல்*

4.ஆ. கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை

எ.கா. *பர பர*

மேற்கண்ட வகைப்பாட்டைப் பின்வருமாறு கிளைப்படமாக உருப்படுத்தம் செய்யலாம்:



7. சுருக்கவுரை

வினை அடிகளை அவற்றின் உருபனியல் மற்றும் உருபொலியனியல் நடத்தை அடிப்படையில் பாகுபாடு செய்வது வினைகளின் திரிபுகளையும் ஆக்கங்களையும் அறிந்துகொள்ள பயனுள்ளதாக அமையும். இதன் அடிப்படையில் வினை அடிகள் பின்வருமாறு பாகுபாடு செய்யப்பட்டு விளக்கப்பட்டன: தெரிநிலை வினை-குறிப்பு வினைப் பாகுபாடு, தன்வினை-பிறவினைப் பாகுபாடு, செயப்படுபொருள் குன்றாவினை-குன்றியவினைப் பாகுபாடு, வினைத்திரிபுசார் பாகுபாடு, சீரற்ற-சீரான வினைப் பாகுபாடு. பலவேறு அறிஞர்கள் வினைத்திரிபு அடிப்படையில் தமிழ் வினைகளைப் பகுத்துள்ளமை பற்றி விரிவாகக் கூறப்பட்டது. சீரற்ற-சீரான வினைப்பாகு பாடு அடிப்படையிலும் வினைகளைப் பகுப்பது விளக்கப்பட்டு ஒட்டு மொத்தமான வினைப்பாகுபாடு இறுதியில் தரப்பட்டுள்ளது.

துணைநின்ற இலக்கியங்கள்

அகநானூறு. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

ஐங்குறுநூறு. திருநெல்;வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

கலித்தொகை. பாகநேரி தன வைசிய இளைஞர் தமிழ் சங்கம். கம்பராமாயணம் (வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியர் உரை) மதராஸ்: வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி.

குறுந்தொகை. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

சிலப்பதிகாரம். பாகநேரி தன வைசிய இளைஞர் தமிழ் சங்கம்.

சீவகசிந்தாமணி. திருநெல்;வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

இலக்கணக்கொத்து மூலமுன் உரையும். டி.வி. கோபாலஐயர் (பதிப்பு) தஞ்சாவூர்: சரஸ்வதி மகால்.

திருக்குறள். திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

திருக்குறள் சொற்பொருள் அகர வரிசை. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

திருத்தொண்டர் புராணம். (பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர்புராணம்). கோயம்பத்தூர்: கோவைத்தமிழ்ச்சங்கம் பப்ளிக்கேக்ஷன். தொல்காப்பியம் - சொல்லதிகார உரை – சேனாவரையர். திருநெல்;வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

தேவாரம். (தொகுதி 1, 2). Hymnes Sivaites Du Pays Tamoul (Panmurai). edition tablic Par T.V. Gopala Iyer Sons la direction de Francois Gross (1985). Pondichiry : Institut Francais D'Indologic.

தொல்காப்பியம் - சொல்லதிகார உரை – இளம்பூரணர். திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி. தொல்காப்பியம். சொல்லதிகார உரை – தெய்வச்சிலையார். திருநெல்;வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

தொல்காப்பியம். பொருளதிகார உரை –பேராசிரியர். திருநெல்;வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி. தொல்காபியம் மூலம். திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும். உ.வே. சாமிநாதர் (பதிப்பு) மதாராஸ். நாலாயிர திவ்விய பரபந்தம். மதராஸ்: திருவேங்கடத்தான்திருமன்றம். பரிபாடல். திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி. பதிற்றுப்பத்து. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.

பத்துப்பாட்டு. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.
புறநானூறு. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.
தேவாரம். (தொகுதி 1-7). தருமபுரம். தருமபுரம் மடம்.
மணிமேகலை. திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.
நன்னூல். திருநெல்வேலி: தி சவுத் இந்தியா சைவ சித்தாந்த வர்கஸ் பப்ளிசிங் சொசைட்டி.
வில்லிபாணம் தொகுதி 1 – 9 (வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் உரை). மதராஸ்: குவை பப்ளிகேஷன் மற்றும் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் கம்பெனி

துணை நூல்களும் கட்டுரைகளும்

அகஸ்தியலிங்கம், எஸ். 1982 மொழியியல் – சொல்லியியல் – 2 -வினையியல் 1, அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியல் வெளியீடு.
இராசேந்திரன், ச. 2008. தமிழ் வினை அடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
குமாரசாமி ராஜா, என். 1970. “தமிழ் தெரியாதவர்களுக்கு”, பொருள் 2.1.30-35.
Agesthialingom, S. 1971. “A Note on Tamil Verb Classification” in Anthropological Linguistics 13.4.121-125.
Arden, A. H. 1891. A Progressive Grammar of the Tamil Language. (Clayton, A.C. 5th rev.ed. repr. 1976). The Christian Literature Society.
Asher, R.E. 1969. “Classification of Tamil and Malayalam Verbs” (a Comparative Study) in Agesthialingom, S and Kumaraswami Raja, N (Eds). 1969.
Balasubramanian, K.1980. “Tenseless Predicatives in Old Tamil” in Israel, M. Shanmugam, R and Vijayavenugopal, G (Eds). 1980. (60-71).
Balasubramanian, K. 1981. A Descriptive Grammar of Tolka:ppiyam. Unpublished Ph.D. thesis, Annamalai University.
Beschi, C.J. 1848, repr. 1971. A Grammar of the Common Dialect of the Tamil Language. Madras.
Graul, C.1855. An Outline of Tamil Grammar. Kaivalyanava ni:ta, Bibliotheca Tamulica. Leipzig.
Juilland, A and, Macris, J. 1962. English Verb System. The Hague: Mouton.
Kothandaraman, P. 1972. Studies in Tamil Linguistics. Madras: Tamil Nu: lagam.
Lakoff. G. 1970. Irregularity in Syntax. New York: Holt, Rinehart and Winston, Inc.

Lisker, Leigh. 1951. “Tamil Verb Classification” JAOS 21:111-114.

Paramasivam, K. 1979. Effectivity and Causativity in Tamil. Trivandrum: Dravidian Linguistic Association Publication.

Pope, G.U. 1904. A Handbook of the Tamil Language (Seventh ed., repr., 1979). New Delhi: Asian Educational Services.

1924-1939. Tamil Lexicon Vol. I to VI and Supplement. Madras : University of Madras Publication.